# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு.

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப் பத்திர உரிமையை மாற்றுதல்

## மாற்றப்படுவோருக்கான வழிகாட்டல் தொகுப்பு.

## 1.விண்ணப்பப் படிவம் பெறுதல்

அனைத்து மாற்றப்படுவோரும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.ntc.gov.lk இணையதளத்தை அணுகி பயணிச் சேவை அனுமதிப் பத்திர உரிமை மாற்றல் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் (DOWNLOAD) செய்து கொள்ள வேண்டும்.

## 2.விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தல்.

மாற்றப்படுவோருக்கு பயணிச் சேவை அனுமதிப் பத்திர உரிமையை மாற்றுவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்தது என்று எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், மாற்றப்படுவோர் கீழே வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு தொகுப்பின் படி முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் அதற்கு அவசியமான ஆவணங்களையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் பயணிச் சேவை அனுமதிப் பத்திரத்தின் மாற்றுநருடன் சேர்ந்து நேரில் சென்று ஒப்படைக்க வேண்டும்.

**2.1 அனைத்து மாற்றப்படுவோரும் தமது விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.**

1. மாற்றப்படுவோரின் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று (மாற்றப்படுவோர் ஒரு நிறுவனம் என்றால் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் தனித்தனியாக வழங்க வேண்டும்).
2. மாற்றப்படுவோரின் கடவுச்சீட்டு அளவிலான (3.5*4.5cm) வர்ண புகைப்படம் ஒன்று (மாற்றுநர் ஒரு நிறுவனம் என்றால் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் தனித்தனியாக வழங்க வேண்டும்).
3. மாற்றப்படுவோரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
4. மாற்றப்படுவோரின் திருமண சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
5. மாற்றப்படுவோரின் பெயரில் பராமரிக்கப்படும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே ரூ. இரண்டு மில்லியன் இருப்பை பராமரித்திருக்கிறார் என்று காட்டும் வங்கி அறிக்கைகளின் சான்றிதழ் பிரதிகள் — ரூ. இரண்டு மில்லியன் இருப்பு பராமரிக்கப்பட வேண்டும்.
6. மாற்றப்படுவோருக்கு வழங்கப்பட்ட பொலிஸ் தேடல் அறிக்கை மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ் (மாற்றப்படுவோர் ஒரு நிறுவனம் என்றால் தேவையில்லை).

7. மாற்றப்படுவோர் ஒரு நிறுவனம் என்றால், மாற்றப்படுவோராக இருப்பதற்கு சம்மதம் தெரிவிக்கும் நிறுவனத்தின் இயக்குநர் குழுவின் தீர்மானம்.

8. தகுதிவாய்ந்த தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட நிறுவனத்தின் வருடாந்திர இருப்புநிலை அறிக்கையின் சான்றிதழ் பிரதி.

9. ஒவ்வொரு சாட்சிக்கும் தனித்தனி பிரதியாக சாட்சிகளின் தேசிய அடையாள அட்டைகளின் சான்றிதழ் பிரதிகள்.

10. பேருந்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் அதன் பிரதி ஒன்று.

**2.2. இதற்கு மேலதிகமாக, பயணிச் சேவை அனுமதிப் பத்திர உரிமையாளர் இறந்திருக்கும் அல்லது உறவு அடிப்படையில் மாற்றல் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மாற்றப்படுவோர் கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.**

1. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி ஒன்று (புகைப்படம் தெளிவற்றதாக இருந்தால், இறப்பதற்கு முன்பு எடுக்கப்பட்ட இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் கடவுச்சீட்டு அளவிலான வர்ண புகைப்படம் ஒன்று இணைக்கவும்).
2. அனுமதிப் பத்திர உரிமையாளருடனான உறவை உறுதிப்படுத்துவதற்கு சத்தியப்பிரமாண ஆணையாளர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்ட சத்தியப்பிரமாண அறிக்கை.

**2.3 மாற்றப்படுவோர் மனைவி / கணவர், 18 வயது பூர்த்தியடைந்த மகன் / மகள் அல்லது சகோதரர் / சகோதரி என்றால், மேலே குறிப்பிட்ட ஆவணங்களுக்கு கூடுதலாக, பொருந்தும் வகையில் கீழ்க்கண்ட ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.**

1. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
2. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் திருமண சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
3. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் மனைவி / கணவரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
4. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் பயணிச் சேவை அனுமதிப் பத்திரம் மாற்றலுக்கு உரிய மகன் / மகளின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.
5. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் பயணிச் சேவை அனுமதிப் பத்திரம் மாற்றலுக்கு உரிய பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.

6. இறந்த அனுமதிப் பத்திர உரிமையாளரின் பயணிச் சேவை அனுமதிப் பத்திரம் மாற்றலுக்கு உரிய சகோதரர் / சகோதரியின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் சான்றிதழ் பிரதி ஒன்று.

**2.4 மாற்றப்படுவோர் பயணிச் சேவை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது, அந்த பேருந்துடன் சேர்ந்து கீழ்க்கண்ட ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.**

1. பேருந்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் அதன் பிரதி ஒன்று.
2. காப்புறுதிச் சான்றிதழ்.
3. சம்பந்தப்பட்ட பேருந்து.
4. வாகனத்தின் தகுதிச் சான்றிதழ்.
5. சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான வருவாய் அனுமதிப் பத்திரம் மற்றும் வாயு வெளியேற்றல் சான்றிதழ்.
6. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விவரக்குறிப்பு ஆய்வு அறிக்கை.
7. நிரந்தர சாரதியின் தே.போ.ஆ.கு. (N.T.C.) அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி ஒன்று.
8. மாற்று சாரதியின் தே.ப.ஆ.கு. (N.T.C.) அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி ஒன்று.
9. நடத்துவோரின் (Conductor) தே.ப.ஆ.கு. (N.T.C.) அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி ஒன்று.

**** மாற்றப்படுவோர் பயணிச் சேவை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு மேலே வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு தொகுப்பின் படி முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களையும் அதற்குரிய ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட பேருந்தின் உரிமையை கையகப்படுத்திய பிறகும், (203 ஆம் அதிகாரமான) மோட்டார் வாகன சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழை பெற்ற ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது மாற்றப்படுவோர் செல்லுபடியாகும் பயணிச் சேவை அனுமதிப் பத்திரத்தை மாற்றுவதற்கான விண்ணப்பக் கட்டணமான ரூபாய் ஐந்தாயிரம் (ரூ. 5,000.00) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் செலுத்த வேண்டும்.**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

உடனடி அழைப்பு : 1955 தொலைபேசி - 2587372 தொலைபிரதி (Fax) - 2058138